தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் - 2021

பழங்குடிகளுக்கான தேர்தல் அறிக்கை



தயாரிப்பு

ஏக்தா பரிசத், தமிழ்நாடு

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் - 2021
பழங்குடிகளுக்கான தேர்தல் அறிக்கை.

தயாரிப்பு

ஏக்தா பரிசத், தமிழ்நாடு

உள்ளடக்கம்

- முன்னுரை
- இனக்குழு அடையாளம்
- நில உரிமை
- கல்வி மற்றும் வேலைவாய்ப்பு
- நிர்வாகம்

முன்னுரை

தமிழகத்தின் 16 வது சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு இம்மண்ணின் பூர்வகுடி பழங்குடி மக்களுக்கு செய்யப்படவேண்டிய முக்கியமான கோரிக்கைகள் அடங்கிய தேர்தல் அறிக்கையினை தமிழ்நாடு ஏக்தா பரிசத் சார்பாக வெளியிடுகின்றோம்.

காந்திய கொள்கையினால் பெரிதும் ஈர்க்கப்பட்ட புகழ்பெற்ற மானுடவியல் பேரறிஞர். வெரியர் எல்வின் பழங்குடியினருக்கான முன்னேற்றம் குறித்து கூறும்போது பழங்குடியினரின் முன்னேற்றம் என்பது கடிகாரக்கின் முட்களை போன்றது. அது வேகமாகவோ. மெதுவாகவோ அல்லது சுற்றாமல் ஒரே இடத்திலோ கேக்கமடைந்து நிற்க கூடாது. இதனைப்போன்ற சீரான இயக்கமே பழங்குடிகளுக்கு பொருத்தமான முன்னேற்றமாகும் என்பார்.

பழங்குடிகளின் வளர்ச்சியானது அம்மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் கலாச்சார, பாரம்பரிய கன்மைகளை சிதைக்காத நிலைத்து - நீடித்திருக்க வேண்டும்.ஆனால் இன்றோ குரலற்ற பூர்வகுடி மக்களின் வளர்ச்சி, முன்னேற்றம் குறித்து இன்றைய அரசுகளுக்கு புரிதலின்மையும், போதிய முக்கியத்துவமும் அளிக்கப்படுவதில்லை என்பது பெரும் வேதனையே.

உண்மையில் பழங்குடிகள் தங்களுக்கென்று சுய ஆளுகை, பொருளாதாரம், நிர்வாகம், ஒழுங்கமை உடையவர்கள். தனித்தன்மையுடன் சிறப்பான, மகிழ்வான வாழ்வை சுதந்திரமாக வாழ்ந்தவர்கள். ஆனால்இவர்கள் அரசு கட்டமைப்புக்குள்இணைக்கப்பட்ட பின்பு அவர்களுடைய வாழ்நிலையில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக பாரம்பரிய உரிமைகளும் பறிக்கப்பட்டு நிம்மதி இழந்து வாடுகின்றனர்.

பழங்குடியினரின் அக்கறைய சிறந்த வாம்வம், மண்ணுரிமையும், மாண்புரிமையும் பாதுகாக்கப்பட இச்சிறிய முயற்சி துணை நிற்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.இத்தேர்தல் அறிக்கை முன்னெடுப்பிற்கு துணைநின்ற பழங்குடியினர் உரிமைகளுக்கான செயல்பாட்டாளர் அண்ணன் வீரப்பன், காடர் பழங்குடி இன தலைவர் அண்ணன் தங்கசாமி, அருமை தம்பிகள் வெங்கடேஷ், மகேந்திர பிரபு, களரி காட்டுப்பள்ளி நிறுவனர். யோகேஷ் கார்த்திக் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

தோழமையுடன்,

ச.தனராஜ்,
dhanamradhai@gmail.com
+91 9361330173

இனக் குழு அடையாளம்

தமிழகப் பழங்குடிகள் 21-ம் நூற்றாண்டில் இன்றைக்கும் இனக் குழு அடையாள சிக்கலில் அதிகம் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் ஏராளமான பூர்வகுடியினர் பழங்குடியினருக்கு உரித்தான சமூக, பொருளாதார, கலாச்சார வாழ்வியல் தன்மைகளை கொண்டிருந்தாலும் அவர்கள் அரசால் பட்டியல் பழங்குடிகளாக(ST) அங்கீகரிக்கப்படவில்லை. ஆகவே அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் பல தலைமுறைகளாக பழங்குடிஅடையாளத்திற்காக போராடி வருகின்றனர். இன்றைக்கும் இயற்கையை வணங்கி பொதுச் சொத்தாக பாவிக்கும் இம்மக்கள் பழங்குடி உரிமை கிடைக்கப் பெறாதவர்களாகவே இருப்பது முரண்.

- புலையர், நரிக்குறவர்கள் எனும் வாக்ரிபோலி, குறவர்கள் மற்றும் பிற தகுதி வாய்ந்த அலைக்குடிகளை பட்டியல் பழங்குடியினராக மத்திய அரசு அறிவித்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இது வரை நிலுவையில் உள்ள 'பழங்குடி நிலை அறிந்தேற்புக் கோரிக்கைகளை' உடனடியாக மாநில, நடுவண் அரசுகள்நிறைவேற்றிட உரிய நடவடிக்கைகளை முடிக்கிவிட வேண்டும்.

- தமிழகத்தில் பட்டியல் பழங்குடியினர் பட்டியலில் உள்ள 36 இனத்தின் பெயர்களை சீரமைத்து, பட்டியலை ஒழுங்குப்படுத்தி மாற்றியமைக்க வேண்டும். குறிப்பாக ஒரே சமூகம் பல பெயர்களில் அழைக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும்.

- தொல்பழங்குடிகள் பட்டியலை அரசு இன்றைய சூழலுக்கு பொருத்தமாக மாற்றி அமைக்க வேண்டும். குறிப்பாக அடர்வனத்தில் வாழும் காடர், மலை மலைசர், முதுவர், புலையர், பளியர், பழங்குடிகளை இப்பட்டியலில் இணைத்திட வேண்டும்.

- சமுதாய சான்றிதழுக்காக பழங்குடிகள் நீண்டகாலம் போராடுவதை மாற்றி விண்ணப்பித்த ஒரு வார காலத்திற்குள் சமுதாய சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

நில உரிமை

- பழங்குடி மக்களின் பாரம்பரியமான உரிமைகளைப் பாதுகாக்கும் வன நில உரிமை அங்கீகார சட்டம் 2006 முழுமையாக தமிழ்நாட்டில் நிறைவேற்றிட வேண்டும். இச்சட்டத்தின் மூலம் வனத்தை சார்ந்து வாழும் பழங்குடிகளின் குடியிருப்பு மனை, விவசாயம், சிறு வன மகசூல் சேகரிக்கும் சமுதாய உரிமைகள், கலாச்சார உரிமைகளை அரசு மிக விரைவாக சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி முழுமையாக வேண்டும்.

- பழங்குடியினரின் நிலங்களை பழங்குடியினர் அல்லாதோர் வாங்குவது தடை செய்யப்பட வேண்டும். பழங்குடியினரிடமிருந்து அபகரிக்கப்பட்ட நிலங்களை திரும்பப் பெற்று பழங்குடிகளின் வாரிசுகளுக்கு திரும்ப அளிக்கப்பட வேண்டும். பிற மாநிலங்களில் இருப்பதை போன்று பழங்குடியினர் நிலங்களை விற்பதற்கும், வாங்குவதற்கு தடை செய்யும் அரசின் உத்தரவு சட்டமாக்கப்பட வேண்டும்.

- முழு வனத்தையும் பொதுச் சொத்தாக கருதி வாழ்ந்து வந்த பழங்குடிகள் இன்று நிலமற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கும் சூழலில் ஒவ்வொரு பழங்குடிகளும் நில உரிமை பெறுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

- புலிகள் காப்பக பகுதியில் வாழும் மக்களுக்கு, தங்கள் கிராமங்களில் இயற்கை பேரிடர் ஏற்பட்டு பாதிக்கப்பட்டால் உடனடியாக மாற்று இடமாக அவர்கள் விரும்பும் இடத்தில் வீடுகட்ட, விவசாயம் செய்து கொள்ள அனைத்து வகை உரிமைகளையும் வழங்கிட வேண்டும்.

- அணைக்கட்டு திட்டங்களால் பாதிக்கப்பட்ட பழங்குடிகளுக்கும் அவர்களுடைய வாரிசுகளுக்கும் அரசு வேலை, அல்லது அதற்கு ஈடான வன நிலங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும்.

- வனப்பகுதியில் பெரும் தோட்டங்களுக்கு வழங்கப்பட்டிருக்க கூடிய ஒப்பந்த காலங்கள் நிறைவடைந்த பின்னர் அந்நிலங்களை அரசு திரும்பப் பெற்று மீண்டும் பல்லுயிர் சூழல் நிறைந்த காடுகளாக மாற்றம் செய்ய வேண்டும். மேலும் அப்பகுதியில் உள்ள நிலமற்ற பழங்குடிகளுக்கு அந்நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

கல்வி, வேலை வாய்ப்பு

- வனத்தில் வாழும் பழங்குடியினர் குழந்தைகளுக்கு அவர்கள்தம் தாய்மொழியிலேயேதொடக்க நிலை கல்வி அளிக்கப்பட வேண்டும். இம் மாணவர்களுக்கு உயர் நிலை படிப்புகளிலும் தனிப்பாட திட்டம் உருவாக்க பட வேண்டும்.
- பழங்குடியினருக்கான கல்வி முன்னேற்றத்திற்கு ஒருங்கிணைந்த பழங்குடியினர் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும்.

- பழங்குடியினர் உண்டு உறைவிட பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீட்டினை அதிகரிப்பதுடன் அப்பள்ளிகளில் 50% பழங்குடி பணியாளர்களே பணியமர்த்தப்பட வேண்டும்.

- தாய்மொழி தமிழ் அல்லாத பழங்குடியினர் மொழிகள் அழியாமல் பாதுகாத்திட வேண்டும். குறிப்பாக எழுத்து வடிவம் இல்லாத காடர், முதுவர், மலைமலசர், இருளர், குரும்பர், காட்டு நாயக்கர், பணியர், சோளகர், உள்ளிட்ட மொழிகளுக்கு எழுத்து வடிவம் அளிக்க உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை துவக்க வேண்டும்.

- வனம், வன உயிர், சூழலியல் சார்ந்த கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் பழங்குடிகளுக்கு 50 சதவீதம் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். குறிப்பாக தமிழக வனத்துறையில் வன பாதுகாப்பு பணிகளில் 50% வனம் சார் பழங்குடிகளை பணியமர்த்த வேண்டும்.

- ஆபத்தான தீ தடுப்பு பணிகள், தீத்தடுப்பு கோடு உருவாக்கும் பணிகளில் ஈடுபடும் பழங்குடிகளுக்கு நாள் ஒன்றுக்கு 8 மணி நேர உழைப்பிற்கு ரூபாய் 2,000 ஊதியமாகவழங்கப்பட வேண்டும்.

- வேட்டை தடுப்பு தீத்தடுப்பு பணிகளில் தற்காலிகமாக பணியாற்றும் அனைத்து பழங்குடியினரையும் அரசு நிரந்தர பணியாளர்களாகஅறிவிக்க வேண்டும்.

நிர்வாகம்

- வன நில உரிமை அங்கீகார சட்டம் 2006 -ன் படி அனைத்து வன கிராமங்களையும் வருவாய் கிராமங்களாக மாற்றம் செய்ய வேண்டும்.

- பழங்குடியினர் நல வாரியம், ஆன்றோர் பேரவை, மாநில அளவிலான வன உரிமை அமுலாக்க கண்காணிப்பு குழுக்கள் மாற்றி அமைக்கப்பட்டு அதன் கூட்டம் குறிப்பிட்ட கால அளவுக்குள் முறையாக நடைபெற வேண்டும். .

- 'பழங்குடியினர் நல இயக்குநர்' பணியிடத்திற்கு 'இந்திய வனப் பணி' சார்ந்தோரை நியமிக்கும் தற்போதைய 'எழுதப்படாத நடைமுறை'யை உடனடியாக நிறுத்திவிட்டு, முன்பு போலவே, 'இந்திய ஆட்சிப் பணி' அலுவலர்களைக்கொண்டே நியமிக்கும் நடைமுறையைக் கொண்டுவரவேண்டும்.

- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்குப் பொதுவாக ஒருவரே அரசு செயலாளராகச் செயலாற்றுவதற்கு மாறாகத் தேசியப் பட்டியல் பழங்குடி ஆணையம் வலியுறுத்தியுள்ளவாறு பழங்குடி நலத் துறைக்கெனத் தனியாக ஓர் அரசு செயலாளர் நியமிக்கப்பட வேண்டும்.

- மனித - விலங்கு மோதலுக்கு காரணமான வழித்தடங்கள் ஆக்கிரமிப்பு, வன நிலங்கள் ஆக்கிரமிப்பை உடனடியாக அகற்ற வேண்டும்.

- வனத்திற்குள் மின்சார வேலி அமைத்தல் உள்ளிட்டவற்றை தடை செய்யப்படவேண்டும். வனவிலங்குகள் தாக்குதலால் உயிரிழப்பவருக்கு, தலா 10 இலட்சம் இழப்பீடாக வழங்கப்பட வேண்டும். உயிரிழந்தவர்களின் வாரிசுகளுக்கு, காயம்பட்டவர்களுக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.

- வனத்தை விட்டு வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் வன உயிரின பாதுகாப்பிற்காகவும் விரட்டப்பட்ட, கட்டாயமாக புலம் பெயர்க்கப்பட்ட மக்கள் மீண்டும் தாங்கள் விரும்பிய இடத்தில் வாழ்வதற்கு அரசு அனுமதிக்க வேண்டும்.

.

- பழங்குடியினர் விவசாய உற்பத்தி, காடுபடு - சிறுவன மகசூல் பொருட்களை அரசு பேருந்தில் 200 கி. மீ வரை கட்டணமின்றி ஏற்றி செல்ல அனுமதிக்க வேண்டும்.

- பழங்குடியின மக்கள் அரசின் நலத்திட்டங்களை பெறவும், வளர்ச்சி திட்டங்கள் பழங்குடியினர் கிராமங்களில் முறையாக நடைபெறுவதை கண்காணிக்க கேரள அரசைப் போல 12,000 பழங்குடி இனத்தை சேர்ந்த சமூக சேவகர்களை மாதம் 15,000 ரூபாய் சம்பளத்தில் பணியமர்த்த வேண்டும். இவர்கள் அரசிற்கும் பழங்குடிகளுக்கும் இணைப்பாக செயல்பட்டு கல்வி, மருத்துவம், சுகாதாரம், உள்ளூர் நிர்வாகம், கிராம சபை, தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம் போன்ற செயல்பாடுகளில் உதவி செய்வார்கள்.

- தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் வனம் சார் பழங்குடி கிராமங்களில் கட்டாயம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் காடுகளில் மரம் வளர்ப்பு, சூழலியல் மேம்பாட்டு பணிகளின் மூலமாக காடுகளை மேன்மையான முறையில் பாதுகாக்க முடியும். உண்ணி செடி போன்ற களைச் செடிகள் வளர்வதை பெருமளவு கட்டுப்படுத்த முடியும். இதனால் காடு சார்ந்த பழங்குடிகளின் வருவாய், வாழ்வாதாரத்தையும் உறுதி செய்ய இயலும்.

- வனம்சார் பழங்குடிகள் வசிக்கும் பகுதிகளில் அங்கன்வாடி, பள்ளிக்கூடங்கள், மற்றும் வருவாய் துறை உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் உள்ளூர் பழங்குடிகளுக்கு வேலைவாய்ப்பில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

- புதிய வனச்சட்டத்தை கைவிட வேண்டும்.வனத்துறையில் உள்ள நிதியை பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்த வேண்டும்

- பழங்குடியினர் கிராமத்தில் அடிப்படை வசதிகளான சாலை, மின்சாரம், பேருந்து, குடிநீர், கல்வி, மருத்துவம் வசதிகளை உடனடியாக ஏற்படுத்தி தர வேண்டும். புலிகள் காப்பகம் அல்லது சூழலியல், கானுயிர் பாதுகாப்பு எனும் பெயரில் பழங்குடிகளின் அடிப்படை உரிமைகளை பறிக்கப்பட கூடாது.

- பழங்குடியினரின் விவசாய உற்பத்திப் பொருட்கள், மற்றும் தேன், குங்கிலியம், மிளகு உள்ளிட்ட பொருட்களை அரசின் நியாய விலை கடைகள் மூலமாக விற்பனை செய்ய வேண்டும்.

- வனத்தில் கால்நடை மேய்ச்சல் உரிமையையும், மூங்கில் வெட்டி விற்கும் உரிமையையும் தடை செய்ய கூடாது.

- ஆண்டுதோறும் சர்வதேச பழங்குடியினர் தினத்தை முன்னிட்டு ஆதிவாசிகளின் கலாச்சார திருவிழாவை மாவட்ட அளவில் கொண்டாட வேண்டும்.

- பழங்குடியினரின் கலாச்சாரம், மொழி, பண்பாட்டை பாதுகாத்து வளர்த்திட பழங்குடியினர் கலாச்சார வளர்ச்சி கழகம் உருவாக்கப்பட வேண்டும்.

- மாவட்டம் தோறும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பழங்குடியினரின் உற்பத்தி, கைவினை பொருட்களை விற்பனை செய்ய விற்பனை கலைக்கூடம் உருவாக்கப்பட வேண்டும்.

- வனத்தில் வாழும் பழங்குடிகளுக்கு மழை காலங்களில் (சுமார் 6 மாதங்களுக்கு) குடும்ப அட்டை ஒன்றுக்கு அரிசி, பருப்பு, சர்க்கரையுடன், சிறு தானியங்கள், முட்டை, சத்துப்பொருட்கள், மளிகை பொருட்கள், எண்ணெய், நெய், மாவு பொருட்களளை அண்டை மாநிலமான கர்நாடகாவை போல தமிழகத்தில்விலையின்றி வழங்க வேண்டும்.

- குழந்தை பிறப்பு மற்றும் மக்கள் தொகை எண்ணிக்கையில் மிக வேகமாக அருகி (குறைந்து) வரும் குறிப்பிட்ட வனம்சார் பழங்குடிகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனையின் தீவிரத் தன்மையை அரசு உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும்.அவர்கள் வாழ்வியலுக்கு பொருத்தமான பாரம்பரிய உணவு பழக்கத்தை மீட்டெடுத்து, சுகாதாரம், மற்றும் மருத்துவ வசதிகளில் தனி கவனம் செலுத்தி, அவ்வின மக்களை பாதுகாக்க வேண்டும்.

- கிராம பஞ்சாயத்துக்களில் பழங்குடி மக்களுக்கு அறிவிக்கப்படும் திட்டங்கள், சலுகைகள் அனைத்தும் பேரூராட்சி, நகராட்சி பகுதிகளில் வாழும் பழங்குடி மக்களும் பயன்பெறுகின்ற வகையில் அதே திட்டங்களை நடைமுறைபடுத்த வேண்டும்.

நம் மண்ணின் பூர்வகுடி மக்களின் உரிமைகளுக்கு துணை நிற்போம்.

உரிமைகளை வென்றெடுப்போம்;இப்பூவுலகை பாதுக்காப்போம்...